**செ.வெ.எண். 392** **நாள் 28.06.2011**

## செய்தி வெளியீடு

ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையிலும், அவர்களுக்கு முழு உணவு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.6.2011 அன்று முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். பொது விநியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் ஒரே மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

சென்னை வடக்கு, வில்லிவாக்கம் மண்டலம், சிட்கோ நகரில் 2 ஆண்டு காலமாக செயல்பட்டு வரும் சிந்தாமணி நியாய விலைக் கடை எண்.3–ல் 1811 குடும்ப அட்டைகள் உள்ளன. பலராமபுரம் பகுதியில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 232 குடும்ப அட்டைதாரர்கள் வசிக்கின்றனர். சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அதன் ஒரு பகுதியாக தொழுநோயால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில், வில்லிவாக்கம் மண்டலத்தில் செயல்பட்டுவரும் சிட்கோ நகர் சிந்தாமணி கடை எண்.3–ல் உள்ள அவர்களது குடும்ப அட்டைகளை பிரித்து, பலராமபுரத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையினை அமைத்திட ஆணையிட்டார்கள். இந்தப் புதிய பகுதி நேர நியாய விலைக் கடையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.6.2011) தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் திறந்து வைத்தார்.

சிட்கோ நகர் சிந்தாமணி கடை எண்.3க்கும், பலராமபுரத்திற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 1 கி.மீ. ஆகும். தொழுநோயாளிகளின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு பகுதி நேரக்கடைக்கும், தாய்க் கடைக்கும் குறைந்த பட்சம் 1.5 கி.மீ. இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை சிறப்பு இனமாக தளர்வு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில் பலராமபுரத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டுள்ளது.

தாய் கடையான சிட்கோ நகர் சிந்தாமணி கடை எண்.3 வாரத்தில் செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை ஐந்து நாட்களிலும், பலராமபுரம் பகுதிநேர நியாய விலைக்கடை தொழுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வாரத்தில் திங்கள் கிழமையன்றும் செயல்படும்.

இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலம் பலராமபுரத்தில் உள்ள பயனாளிகளிடம் பேசுகையில், "இன்று நியாய விலைக் கடையை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறப்பு நியாய விலைக் கடையினால் பயன்பெறவுள்ள பயனாளிகள் அனைவரும்

இதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கடை சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற என் விருப்பத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன். பெரியோர்களே, தாய்மார்களே, இந்த கடையினால் நீங்கள் நல்ல முறையில் பயனடைய வேண்டும். இந்த நியாயவிலைக் கடையின் செயல்பாட்டில் ஏதாவது குறைகள் இருப்பின் நீங்கள் உடனடியாக உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்" என உரையாற்றினார்கள்.

தொழுநோயாளிகளாகிய தங்களின் கோரிக்கையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்று தங்கள் பகுதியில் பகுதிநேர நியாய விலைக்கடையினை ஏற்படுத்திக் கொடுத்து திறந்து வைத்தமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் மற்றும் ஆணையர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.சி.டி. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
தேதி : 28.6.2011